செ.வெ.எண்.77 நாள்: 29.01.2013

## பத்திரிகை செய்தி

தமிழ் நாடு அரசு நிறுவனமான தமிழ் நாடு மீன்வளர்ச்சிக் கழகம் 1980ம் ஆண்டு முதல் சென்னையில் சில்லறை மீன் விற்பனை அங்காடிகளை நிர்வகித்து வருகிறது. தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகம் தற்போது சென்னையில் அண்ணாநகர், நந்தனம், சாந்தோம், தேனாம்பேட்டை மற்றும் பெசன்ட் நகர் ஆகிய இடங்களில் நவீன சில்லறை மீன் விற்பனை மையங்களை அமைத்து நிர்வகித்து வருகிறது. மக்களுக்கு தரமான, சுத்தமான, சுகாதாரமான மற்றும் புரதச்சத்து மிக்க மீன்களை நியாயமான விலையில் விற்பனை செய்யும் நோக்கத்தோடு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 9.10.2012 அன்று 13 நடமாடும் மீன் விற்பனை நிலையங்களை துவக்கி வைத்தார்கள்.

சென்னையில் செயல்பட்டு வரும் தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் நவீன மீன் விற்பனை அங்காடிகளுக்குத் தேவையான மீன்களை கையாளுவதற்கு குளிர்பதன அறை மற்றும் பனிக்கட்டி உற்பத்தி நிலையத்துடன் கூடிய ஒரு நவீன மீன் கையாளும் மையத்தை ரூ.97 இலட்சம் செலவில் சாந்தோம் பகுதியில் தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகம் அமைத்துள்ளது. இம்மையத்தில் மீன்களை கொள்முதல் செய்து சுகாதாரமான முறையில் தரம் பிரித்து, சுத்தப்படுத்தி, குளிரூட்டி சில்லறை விற்பனை நிலையங்களுக்கு அனுப்பப்படும். இம்மையத்தில் நாளொன்றுக்கு சுமார் 10 மெட்ரிக் டன் மீன்கள் கையாளுவதற்கான கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

28.1.2013 அன்று தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் நவீன மீன் கையாளும் மையத்தினை மாண்புமிகு தமிழ் நாடு மீன் வளத்துறை அமைச்சர் திரு.கே.ஏ.ஜெயபால் அவர்கள் பார்வையிட்டார்கள். மேற்படி நிகழ்வின் போது, கால்நடை பராமரிப்பு , பால்வளம் மற்றும் மீன்வளத்துறை அரசு செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., அவர்களும், மீன் வளத்துறை இயக்குநர் மற்றும் தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு.ச.முனியநாதன், இ.ஆ.ப., அவர்களும் மற்றும் மீன் வளத்துறை அதிகாரிகளும் உடன் இருந்தனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9